# உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ. 5 லட்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு... முதல் பக்கத் தொடர்ச்சி!

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள கூடுதல் ஹெலிகாப்டர்கள் அனுப்பி வைக்கக்கோரி ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களுக்கு கடிதம் எழுதினேன்.

வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்பதற்கும், உணவுப் பொருட்களை விநியோகிக்கவும் விமானப் படையின் 4 ஹெலிகாப்டர்கள், கடற்படையின் 2 ஹெலிகாப்டர்கள் மற்றும் கடலோரக் காவல் படையின் 2 ஹெலிகாப்டர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

பெருமழையின் தாக்கம் அதிகமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு கூடுதல் ஹெலிகாப்டர்கள் தேவைப் படுவதால், அதிகபட்ச அளவில் ஹெலிகாப்டர்களை அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் அவர்களும் அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

மாநில மற்றும் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினரின் பெருமுயற்சியினாலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரின் சிறந்த பங்களிப்பினாலும், வருவாய்த் துறை மற்றும் அனைத்துத் துறைகளின் ஒருங்கிணைந்த களப்பணியினாலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தேவையான நிவாரணம் அரசு வழங்கும்!**

பெருமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட வீடுகளை இழந்த மக்களுக்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், கால்நடை இழப்பைச் சந்தித்திருக்கக் கூடிய மக்களுக்கும் தமிழ்நாடு அரசு தேவையான நிவாரணத்தை வழங்கும்.

**● இந்த மழை, வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு, இழப்பீட்டுத் தொகையை ரூபாய் 4 இலட்சத்திலிருந்து, 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும்;**

**● சேதமடைந்த குடிசைகளுக்காக ஏற்கனவே வழங்கப்படும் தொகை ரூபாய் 5 ஆயிரத்தினை, ரூபாய் 10 ஆயிரமாக உயர்த்தி வழங்கிடவும்;**

**● மழையினால் 33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாகப் பாதிக்கப்பட்ட நெற்பயிர் உள்ளிட்ட இறவைப் பாசனப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 13 ஆயிரத்து 500 ரூபாயிலிருந்து, 17 ஆயிரம் ரூபாயாக உயர்த்திவழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.**

**● பல்லாண்டு பயிர்கள் மற்றும் மரங்கள் 33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாகச் சேதமுற்றிருப்பின், இழப்பீடாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 18 ஆயிரம் ரூபாயிலிருந்து, 22 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும்;**

**● மழையினால் 33 விழுக்காடு மற்றும் அதற்கு மேலாகப் பாதிக்கப்பட்ட மானாவாரிப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 7,410 ரூபாயிலிருந்து, 8,500 ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும்;**

**● 33,000 ரூபாயாக இருந்த எருது, பசு உள்ளிட்ட கால்நடைகளின் உயிரிழப்பு நிவாரணத்தை, 37,500 ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும்;**

**● 3,000 ரூபாயாக இருந்த வெள்ளாடு, செம்மறி ஆடு உயிரிழப்பு நிவாரணத்தை 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும்;**

**● சேதமடைந்த படகுகள் மற்றும் வலைகளுக்கு நிவாரண உதவிகளைப் பொறுத்தவரையில், முழுமையாக சேதமடைந்த கட்டுமரங்களுக்கு (மீன்பிடி வலைகள் உட்பட), 32,000 ரூபாயிலிருந்து, 50 ஆயிரம் ரூபாயாகவும், பகுதியாக சேதமடைந்த கட்டுமரங்களுக்கு 10 ஆயிரம் ரூபாயிலிருந்து, 15 ஆயிரம் ரூபாயாகவும், முழுவதும் சேதமடைந்த வல்லம் வகை படகுகளுக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகை ரூபாய் 75 ஆயிரத்திலிருந்து, ஒரு இலட்சம் ரூபாயாகவும், முழுவதும் சேதமடைந்த இயந்திரப் படகுகளுக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகை ரூபாய் 5 இலட்சத்திலிருந்து, ரூபாய் 7 லட்சத்து 50 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கிடவும், சேதமடைந்த வலைகளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து, ரூபாய் 15 ஆயிரமாக உயர்த்தி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.**

**● அதி கனமழையின் காரணமாக, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மிகக் கடுமையாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக 6 ஆயிரம் ரூபாயாக வழங்கப்படும்.**

**● இந்த மாவட்டங்களில் உள்ள இதர வட்டங்களுக்கும் மற்றும் கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு அங்குள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1000 ரூபாய் வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.**

அமைச்சர்களும், அதிகாரிகளும் இறுதிவரை இங்கேயே தங்கி மக்கள் காப்புப் பணிகளில் நிச்சயமாக ஈடுபட இருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

---

### சஸ்பெண்ட் செய்யப்பட்ட

## எதிர்க்கட்சி எம்.பி.க்கள் போராட்டம்!

### நாடாளுமன்ற வளாகத்தில் காந்தி சிலை முன்பு கண்டன முழக்கம்!

*புதுடெல்லி, டிச. 22-*

மக்களவையில் புகைக் குண்டு வீச்சுக்கு எதிராக குரல் எழுப்பியவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டதைக் கண்டித்து, நாடாளுமன்ற வளாகத்தில் எம்.பி.க்கள் நேற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களவையில் புகைக் குண்டு வீசப்பட்ட நிகழ்வு குறித்தும், நாடாளுமன்ற பாதுகாப்பு குளறுபடி குறித்தும் பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் விளக்கம் அளிக்க வேண்டும் எனக் கோரி நாடாளுமன்றத்தில் முழக்கமிட்டதற்காக 143 எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர். இதற்கு ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

நாடாளுமன்ற பாதுகாப்பை உறுதி செய்யக் கோரியும், எம்.பி.க்களின் இடை நீக்கத்தை ரத்து செய்ய வலியுறுத்தியும் நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் நேற்று காலையிலும் போராட்டம் நடைபெற்றது. நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலையில் இருந்து எம்.பி.க்கள் பேரணியாகச் சென்று தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர்.

**இன்று நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்!**

போராட்டத்தில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, எம்.பி.க்கள் இடைநீக்கத்தை கண்டித்து இந்தியா கூட்டணி சார்பில் இன்று (22.12.2023) நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தெரிவித்தார். டெல்லி ஜந்தர் மந்தரில் இந்தியா கூட்டணி போராட்டம் நடத்தும் என்றும் அவர் கூறினார்.

**திருச்சி சிவா எம்.பி. குற்றச்சாட்டு!**

போராட்டத்தில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா, நாடாளுமன்ற பாதுகாப்பு விவகாரத்தில் ஒன்றிய அரசு பதிலளிக்க மறுப்பது ஏன் என்று வினவினார். அவைகளில் உறுப்பினர்களை பேச அனுமதிப்பதில்லை என்றும் அவர் சாடினார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நிகழ்வு குறித்து உள்துறை அமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டும் என்றுதான் கேட்கிறோம்.

ஆனால், எங்கள் கோரிக்கையை சபாநாயகரும், ஒன்றிய அரசும் ஏற்கவில்லை அவையில் எங்கள் கருத்துக்களை தெரிவிக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்கிறோம்.

ஆனால் அதையும் ஏற்கவில்லை ஒன்றிய அரசு அறிக்கை மூலம் விளக்கம் அளிக்க வேண்டும் என எதிர்க் கட்சிகள் கோருவது நியாயமான ஒன்றுதான்

இதற்காக 143 எம்.பி.க்களை இடைநீக்கம் செய்துள்ளனர். இதற்கு எதிராகத்தான் இன்றைக்கு இந்த போராட்டம் நடைபெறுகிறது.

---

### பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

## ஆர்.எஸ்.இராஜகண்ணப்பனுக்கு கூடுதலாக - உயர்கல்வித்துறை!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு



**சென்னை, டிச. 22-**

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பனுக்கு, உயர்கல்வித்துறை கூடுதல் பொறுப்பாக ஒதுக்கப் பட்டுள்ளது.**

**தமிழ்நாடு அமைச்சரவையில் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் கவனித்து வந்த கதர் துறை, கைத்தறித் துறை அமைச்சர் ஆர்.காந்திக்கு மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.**

அதன் விபரம் வருமாறு:–

தமிழ்நாடு அமைச்சரவையில் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக உள்ளார். இந்நிலையில், அவருக்கு நேற்று– உயர்கல்வித்துறையினை கூடுதல் பொறுப்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்.

மேலும் – இராஜகண்ணப்பன் வசம் இருந்த கதர் துறை, அமைச்சர் ஆர்.காந்திக்கு கூடுதல் பொறுப்பாக வழங்கப்பட்டுள்ளது.

அவர், தாம் ஏற்கனவே வைத்துள்ள கைத்தறித் துறையுடன் சேர்த்து கதர்துறையையும் கவனிப்பார் எனவும், முதல்வரின் அறிவிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு அமைச்சரவையில் செய்யப்பட்டுள்ள இவ்விரு மாறுதல்கள் தொடர்பாக ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார். அளுநரும் அதனை ஏற்று அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இவ்விரு அமைச்சர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட துறைகள் விபரம்:

**ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன்:**

**உயர்கல்வித்துறை மற்றும் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை**

(பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன்)

**ஆர்.காந்தி:**

**கைத்தறி மற்றும் கதர்த்துறை**

(கைத்தறி, துணி நூல் துறை, பூதானம், கிராம தானம், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்)

---

### தென் மாவட்டங்களில் கன மழை:

## பொதுமக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீரை உபயோகித்திட வேண்டும்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள்!

*சென்னை, டிச.22-*

தென் மாவட்டங்களில் கனமழையால் பொதுமக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் உபயோகிப்பது குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அறிவுரை வழங்கியுள்ளது.

இது குறித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:-

தென் மாவட்டங்களில் பெய்த கனமழையினை தொடர்ந்து பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கக்கூடிய நீர் ஆதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் சுத்தமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் மட்டுமே பருக வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கொதிக்க வைத்த ஆற வைத்த தண்ணீரையோ அல்லது குளோரினேசன் செய்யப்பட்ட தண்ணீரையோ மட்டுமே குடிப்பதற்கும் சமையல் செய்வதற்கும் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது. குடிநீர் லாரிகள் மற்றும் இதர வாகனங்கள் மூலம் வழங்கப்படும் நீரின் பாதுகாப்பினை உறுதி செய்த பின்னரே உபயோகிக்க வேண்டும்.

மேலும் வெள்ள நீர் உட்புகுந்த மேல்நிலை மற்றும் கீழ்நிலை தொட்டிகளை பிளிச்சிங் பவுடர் கொண்டு நன்கு கழுவி சுத்தம் செய்த பின்னர், தேங்கியுள்ள தண்ணீரை முழுவதுமாக வெளியேற்றிய பின்னரே உபயோகிக்க வேண்டும். சுகாதார மற்ற குடிநீரை பருகுவதால் வயிற்றுப்போக்கு, காலரா உள்ளிட்ட நீரினால் பரவும் நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதால் பொதுமக்கள் இந்த அறிவுரையை தவறாமல் பின்பற்றிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் பாதிக்கப்பட்ட தண்ணீரை வழங்குவதை உறுதி செய்திட உள்ளாட்சி துறை மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை மூலம் பொது சுகாதார துறை வல்லுநர்கள், மருத்துவ அலுவலர்கள், நீரியல் பகுப்பாய்வாளர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் கொண்ட குழுவினர் களப்பணி ஆற்றி உரிய நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

---

### துறைமுகம் யானைக்கவுனி பாலச்சாலையில் கட்டப்பட்டு வரும்

## இரயில்வே மேம்பால கட்டுமானப் பணி!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. ஆய்வு!

*சென்னை, டிச.22-*

துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராயபுரம் மண்டலம், வார்டு 57க்குட்பட்ட யானைக்கவுனி பாலச்சாலையில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பால கட்டுமானப்பணியினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் நேற்று (21.12.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இரயில்வே துறையுடன் யானைக்கவுனி மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியின் பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டுள்ள நிலையில் இரயில்வே துறையின் சார்பில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினர்.

பொதுமக்களுக்கு போக்குவரத்திற்கு பெரும் பிரச்சினை ஏற்படுவதால் வருகின்ற பிப்ரவரி மாதத்திற்குள் இப்பாலத்தின் ஒரு வழிப்பாதைப் பணிகளை முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், மேலும் இதரப் பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு முழுமையாக கொண்டு வரவும் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் இரயில்வே துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினர்.

இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், தென்னக இரயில்வே பொது மேலாளர் ஆர்.என். சிங், இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இரயில்வே துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை, ஆர்.கே. நகர், டோல்கேட், தங்கம் மாளிகையில் நேற்று (21.12.2023) நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் 2,000 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் , மாநகராட்சி நகரமைப்புக் குழுத்தலைவர் தா.இளைய அருணா , மாநில சிறுபான்மை உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர்.சுபேர்கான் , கோவை கிங் ஜெனரேஷன் சபை பாதர் ரெவெரென்ட். ஜான்ஜெபராஜ் , மாநகராட்சி மண்டல குழுத்தலைவர் நேதாஜி யு.கணேசன், மாமன்ற உறுப்பினர் திருமதி.தேவி கதிரேசன், உள்ளாட்சிப் பிரதிநிதிகளை சேர்ந்த இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், என். எம்.கதிரேசன், டி.கே.ரத்னகுமார், ஜே.ஜே.நெல்சன், வி.அருள் எஸ்.எம்.அப்துல் ரஹ்மான் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஈரோடு திண்டல் வேளாளர் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சட்டமன்ற நாயகர் கலைஞர் என்ற கருத்தரங்கில் அரசு தலைமை கொறடா கோ.வி.செழியன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்வில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் எ.ஜி.வெங்கடாசலம், மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி. செல்வராஜ், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சதீஷ்குமார், தமிழ்நாடு சட்டமன்ற கூடுதல் செயலர் ரவிச்சந்திரன், அரசு சட்டபேரவை இணை செயலாளர் ஸ்ரீவித்யா, துணை செயலாளர்கள் ராஜேந்திரன், கணேசன், மண்டல கல்லூரி இணை இயக்குநர் கலைச்செல்வி, மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் கஸ்தூரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.